DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 101/2022 |
| Deposition of Witness for Prosecution | : P.W. 8 (L.W.8) |
| Name | : சத்தியசோபன் |
| Father Name | : இசக்கிமுத்து |
| Village | : மருங்கூர் |
| Taluk | : அகஸ்தீஸ்வரம் |
| Calling | : உதவி ஆய்வாளர் |
| Religion | : இந்து |
| Caste | :-- |
| Age | : 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.02.2024

( எதிரி ஆஜர். )

**முதல் விசாரணை-**

நான் தற்போது கோட்டார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வடசேரி காவல் நிலையத்தில பணி புரிந்தபோது வடசேரி காவல் நிலைய குற்ற எண் 461/2021 இ.தச பிரிவு 380 வழக்கின் எதிரியை தேடி 27.7.2021 ம் தேதி அதிகாலை 6.00 மணியளவில் போலிஸ் பார்ட்டி சகிதம் எதிரியை தேடி கிருஷ்ணன்கோவில் மற்றும் வடசேரி பகுதிகளில் தேடி அதன்பிறகு கிறிஸ்டோபர் பஸ்ஸ்டாண்டின் உள்ளே 7.00 மணியளவில் கன்னியாகுமரி பஸ் நிறுத்தம் பக்கத்தில் தேடிசெல்லும்போது இந்த வழக்கின் சிசிடிவி பதிவுகளை ஒப்பிட்டு தோள்பையுடன் ஒரு நபர் இருப்பதை பார்த்தோம், அவர் எங்களை கண்டவுடன் ஓட எத்தனித்தவரை மடக்கி பிடித்து விசாரணை செய்ததில் தானாக முன்வந்து தன் குற்றத்தை ஒப்புகொண்டு 7.15 மணிக்கு அவரை கைது செய்து அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் சாட்சிகள் பெனிவிக்டர், மற்றும் ஸ்டாலின்ஜெபராஜ் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் தக்கலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 27.6.2020 ம் தேதி மஞ்சாடி சூசையப்பர் கோவிலில் அதிகாலை 6.00 மணியளவில் ஸ்கூருடிரைவரை வைத்து உண்டியலை உடைத்து அதில் உள்ள ரூ. 15,000/ஐ

திருடியதாக ஒப்புக்கொண்டார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஸ்கூருடிரைவரும் கருப்பு தோள்பையும் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டது. **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ சா 6 சாட்சி மூலமாக அ த சா ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அதன்பிறகு அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இது சம்பந்தமாக தக்கலை காவல் நிலைய உதவி ஆய்வாளர்எ ன்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கு வைத்து எத்தனை மணி முதல் எத்தனை மணி வரை தயார் செய்தீர்கள் என்றால் கைது செய்த இடத்தில் வைத்து 7.15 முதல் 8.15 வரை தயார் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தை செல்போன் மூலமாக தட்டச்சு செய்து பின்னர் பிரிண்ட் எடுத்து தயார் செய்தேன். பக்கத்தில் இருந்த பிரிண்டர் கடையில் பிரிண்ட் எடுத்தேன். கடை பெயர் தெரியவில்லை. சாட்சிகள் என்றதை மட்டும் கைப்படஎழுதினேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து உங்களுக்கு வேண்டிய சாட்சிகளை வைத்து பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் இருவரும் திருட்டு போன களியங்காடு வெட்டுர்ணிமடம் சபையை சார்ந்தவர்கள் என்றால் அது பற்றி தெரியாது அந்த பகுதியை சார்ந்தவர்கள். மேற்படி சாட்சிகள் இருவரும் சபையை சார்ந்தவர்கள் என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யும்போது பீட் போலிசார்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர்கள் ஞாபகமில்லை. பீட் போலிசார் என்னுடன் வந்தவர்கள்.

வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் பொதுமக்கள் நிறைய உள்ள பகுதி என்றால் சரிதான். வடசேரி காவல் நிலைய குற்றம் சுமத்தப்பட்ட வழக்கில் பேருந்து நிலையத்தில் இருந்தவர்களை சாட்சியாக விசாரித்தீர்களா என்றால் விசாரிக்கவில்லை நேரடியாக பார்த்தவர்களை விசாரித்துள்ளேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் எந்த தேவைக்காக அங்கு இருந்தார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

எதிரியை கைது செய்தது சம்பந்தமாக தக்கலை காவல் நிலையத்திற்கு 27.7.2021 ம் தேதி தகவல் தெரிவித்தேன்.இந்த வழக்கில் தக்கலை காவல் உதவி ஆய்வாளர் அருளப்பன் அவர்கள் தக்கலை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். தேதி சரியாக தெரியவில்லை. தகவல் சொன்னதற்கு பிறகு ஒரு மாதத்தில் விசாரித்திருப்பார்கள். நீங்கள் சொல்வது போல் ஒப்புதல் வாக்குமூலம் உங்கள் மொபைலில் டைப் செய்து பிரிண்ட் எடுத்ததாக விசாரணை அதிகாரியிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். உங்களுடைய வாக்குமூலத்தில் எதிரியிடம் இருந்து ஸ்கூருடிரைவரோ, பேக்கோ, பணமோ கைப்பற்றியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொன்னது போல் எதிரி உங்களிடம் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் நீங்களாகவே காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரி மீது பொய்யாக வழக்கு

தாக்கல் செய்து தவறுதலாக எதிரியை கைது செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**அரசு தரப்பு குறுக்குவிசாரணை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும்
ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,

பத்மநாபபுரம்